

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.2.2024) முகாம் அலுவலகத்தில், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி அன்னா ஜெர்டே (Ms. Anna Bjerde) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தெற்காசிய மண்டல துணைத் தலைவர் மார்டின் ரைசர், சர்வதேச நிதி நிறுவன Country Manager வெண்டி வெர்னர் (Ms. Wendy Werner), உலக வங்கியின் பங்கு நிதி நிறுவனங்களின் திட்டத் தலைவர் (Equity Finance Institutions, Program Leader) பாவ்னா பாட்டியா, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் டி. ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, பிப். 25-**

**திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகிற சாலையில், ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இரயில்வே பாலம் கட்டப்படும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**தங்கமணி:** திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகின்ற சாலையில் இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றது. இப்பொழுது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. எடப்பாடியார் முதலமைச்சராக இருக்கின்றபோது, ரூபாய் 70 கோடிக்கு நிதியை ஒதுக்கியிருந்தார்கள். 3 ஆண்டு காலமாக நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். நிதிய மைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக சொல்லியிருந்தார்கள். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். விரைந்து செய்தால் மக்களுடைய பயன்பாட்டுக்கு எளிமையாக இருக்குமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக, காவிரி ஆற்றில் இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினால் ...

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய உறுப்பினர் அவர்கள்சொன்னதிருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையானது சுமார் 23 கிலோ மீட்டர் நீளமுள்ள ஓர் மாவட்டச் சாலையாகும். அந்த சாலையில்தான் 119, 119A என்ற இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றன. நீங்கள் தொடர்ந்து கேட்ட அடிப்படையில் தான் அதற்கு முன்னுரிமை கொடுத்து, செறிவுகளை எடுத்து பார்க்கிறபொழுது, 22 ஆம் தேதியில் 119ல் இரயில்வே கடவுகளின் அலகு 1,20,000 போக்குவரத்து செறிவும், 119Aல் 1,22,550 செறிவும் இருப்பதை கருத்தில்கொண்டுதான், DPR ரூபாய் 77 கோடிக்கு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அதற்கு tender போடும் நிலைக்கு வந்திருக்கிறோம். அதனால் நீங்கள் கேட்ட கேள்விற்கு இந்த அரசு மரியாதை கொடுத்துத்தான் இந்தப் பணிகள் நடைபெறுகிறது. அதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ROB பாலம் அந்த இடத்தில் கட்டப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் இரயில்வே கடவுச்சாலை மேம்பாலஅடிக்கல் நாட்டு விழா தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு இப்பணிக்கு அடிக்கல் நாட்டிபேசினார். எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக்குழு தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், பேரூராட்சி மன்ற தலைவர் ஆர்.ஆர்.ராமராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.








